# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண் : 16 /2016 — நாள்: 21 .09.2016

### வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள அறிவுரை வழங்குதல்

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தலின் போது வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு பல்வேறு வழிகாட்டுதல்களை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

1. உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக விபரங்களை அறிந்து கொள்ள மற்றும் புகார் தெரிவிக்க இரண்டு கட்டணமில்லா தொலைபேசி எண்கள் (Toll free Number) BSNL மூலம் பெற்று, அவற்றை உள்ளூர் தொலைக்காட்சி (Cable TV) இலவச அடிச்செய்தி மூலம் பொதுமக்கள் அறிந்திட ஏதுவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. திரையரங்குகளில் தேர்தல் விழிப்புணர்வை சிலைடுகள் மூலம் இலவசமாக விளம்பரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. மாவட்டத்திலுள்ள உள்ளூர் கேபிள் டி.வி இயக்குபவர்கள் மூலம் தொலைக்காட்சிகளில் அடிச்செய்தி (Scrolling) மூலம் இலவசமாக விளம்பரம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இதுபோன்ற பொது மக்கள் கூடும் இடங்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. சுவரொட்டி மற்றும் துண்டுப் பிரசுரங்களில் அச்சடிக்கப்பட வேண்டிய வாசகங்கள்.

- ✓ உள்ளாட்சி உயர்வு பெற தவறாமல் வாக்களிப்பீர்!
- ✓ வாக்குரிமை நமது உரிமை
  வாக்குப்பதிவு நாளன்று தவறாது வாக்களிப்போம்!
- ✓ வாக்களிப்பது நமது கடமை
  அதனைத் தவறாது செய்வீர்!
- ✓ உள்ளாட்சி உயர்வுக்கு உங்கள் வாக்கு அவசியம்!
- ✓ விலை மதிப்பற்ற உங்கள் வாக்கை விற்காதீர்!
- ✓ சரியாக சிந்தித்து வாக்களியுங்கள்!

6. வாய்ப்பிருப்பின் மின்னஞ்சல் (e-mail), டிவிட்டர் (Twitter), பேஸ்புக் (Facebook), போன்றவற்றின் மூலமாகவும் வாக்காளர்களை வாக்களிக்கக் கோரும் வாசகங்களை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. இதே போன்று, குறுஞ்செய்தி (SMS) மூலமாக வாக்காளர்களை தங்கள் வாக்குகளை பதிவு செய்ய, தங்கள் சந்தாதாரர்களுக்கு இலவசமாக வேண்டுகோள்விடுக்க தொலைதொடர்பு நிறுவனங்கள் முன்வந்தால் பயன்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

8. மாநில தேர்தல் ஆணையத்தால் அனுப்பி வைக்கப்படும் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான குறும்படம் அடங்கிய குறுந்தகட்டை (CD) உரிய வகையில் பயன்படுத்தி வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

9. உள்ளாட்சித் தேர்தல் 2016–ன் போது நிறுவப்பட உள்ள வாக்குச்சாவடிகளில், பதற்றமான வாக்குச்சாவடிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளவற்றில், வாக்குப்பதிவின்போது, வாக்குப்பதிவின் ரசகியத் தன்மைக்கு குந்தகம் இல்லாமல் வீடியோ படம் எடுத்து நிகழ்வினைப் பதிவு செய்ய வேண்டும் அல்லது தேவைக்கேற்ப புகைப்பட கருவியுடன் கூடிய மடிக்கணினி வைத்து கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

10. இதே போல் வாக்கு எண்ணிக்கையின் போதும் நிகழ்வினை வீடியோ படம் எடுத்து பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலே குறிபிட்ட பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோரை பயன்படுத்தி மேற்கொண்டு வாக்காளர்கள் அதிக பட்சமாக வாக்களிக்க ஆவன செய்ய அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது

2/09/16

மக்கள் தொடர்பு அலுவலர்